கடலூர் கிழக்கு மாவட்டக் கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் வடலூரில் நடைபெற்றது. கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதாராணி வரவேற்புரையாற்றினார். கழக மகளிரணி துணை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, கழக மகளிரணி சமூகவலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன்,கடலூர் மேயர் சுந்தரி ராஜா,சுதா சம்பத், மஞ்சு உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை கடலூர் கிழக்கு மாவட்டம் முழுதும்

# ஊராட்சி, வார்டு என 622 இடங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

கடலூர், நவ.09

கடலூர் கிழக்கு மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வடலூர், மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 08112024, வெள்ளிக்கிழமை, மாலை கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது.

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் அமுதராணி வரவேற்புரையாற்றினார். கழக மகளிரணி துணை செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, கழக மகளிரணி சமூகவலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர் சுதா சம்பத், கடலூர் மேயர் சுந்தரி ராஜா, பொதுக்குழு உறுப்பினர் மஞ்சு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்கே. பன்னீர்செல்வம் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 395 ஊராட்சி, 267 வார்டுகள் 622 இடங்களில் மாவட்டந்தோறும், நலத்திட்ட உதவிகள், அன்னதானம், மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும். மேலும் மாவட்டம் தோறும் பெண்கள் பங்கு பெறுகின்ற போட்டிகளை நடத்திட வேண்டும்.

பிஎல்ஏ2, பிஎல்சி பூத் கமிட்டி கூட்டங்களை தலைமை கழக பார்வையாளர் கொண்டு சிறப்பாக நடத்திட வேண்டும்.

வருகின்ற 14, 17, 26, 27 ஆகிய தேதிகளில் புதிய வாக்காளர் சேர்க்கை முகாம் நடைப்பெற இருக்கிறது. இதில் புதிய மற்றும் விடுப்பட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கை பணியை துரிதமாக செய்திட வேண்டும். கழக அரசின் சாதனங்களை விளக்கி துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்திட வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், ஒன்றிய கழகச் செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், முத்து.பெருமாள், ஏ.எஸ்.மதியழகன், கே.ஆர்.ராயர், தெ.காசிராஜன், ஆர்.நாராயணசாமி பி.சுப்ரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், விஜயசுந்தரம், எஸ்.செந்தில்குமார், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.ஜி.பி.சபாநாயகம், ஆர்.கலையரசன், எம்.சோழன், வி.கோவிந்தசாமி, த.சங்கர், பி.சுந்தரபாண்டியன், வி.ஆர்.ராஜேந்திரகுமார், ஜெயபாண்டியன், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, சிதம்பரம், நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான கே.ஆர்.செந்தில்குமார், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர கழக செயலாளர் த.தமிழ்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் வே.விக்கிரமன், அ.ஞானசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், வி.பி.பாலு, எஸ்.பி.கண்ணன், பகுதி செயலாளர்கள் நடராஜன், பா.வெங்கடேஷ், இளையராஜா, எஸ்.சலீம், பேரூர் செயலாளர்கள் எஸ்.கணேசமூர்த்தி, க.பழனி, பூ.செல்வகுமார், பேரூரட்சி தலைவர் கோகிலா குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.எம்.மதியழகன், தொமுச பழனிவேல், அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தானூர் சிவக்கொழுந்து, கி.தண்டபாணி, ஆதாதிராவிடர் நலக்குழு பரந்தாமன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சந்திரவர்ணம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு சந்திரசேகர் மகளிர் அணி தலைவர் லதா, துணை தலைவர் அமுதா, துணை அமைப்பாளர்கள் வெ.மலர்விழி, செ. சங்கீதா,ஆ.ஜீவா, சோ.லதா, மகளிர் தொண்டரணி தலைவர் பெ.குமாரி, துணை அமைப்பாளர்கள் அ.தரணி, கா.காயத்ரி, த.ராஜகுமாரி, பா.விஜய லட்சுமி, உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மனோரஞ்சிதம் நன்றியுரையாற்றினார்.

கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக அரங்கில் நடைபெற்ற இரண்டு நாள் பன்னாட்டு வாங்குவோர் விற்பனையாளர் (BuyersSellers Meet) சந்திப்பு நிகழ்ச்சியில் நேற்று (08.11.2024) குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் 43 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்து ரூபாய் 115.35 கோடி மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டனர். அருகில் குறு சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தொழில்துறை ஆணையர் எல்.நிர்மல்ராஜ், கூடுதல் ஆணையர் திருமதி. கே.சௌந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, ஆகியோர் உள்ளனர்.

# 2024-ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, நவ.9-

தமிழ்நாட்டில் பட்டியல் இன மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். பட்டியல் இன மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றிவரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2024 -ஆம் ஆண்டு டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்புவோர் தங்களைப் பற்றிய முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். www.tn.gov.in/ta/forms/Deptname/1 என்ற இணையதளத்திலிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பப்படி வத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம், சென்னை 05 அல்லது சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.